**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 74/2017**

**Deposition of Witnesses for PW6**

| | | |
|---|---|---|
| Name | : | ராமு |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 10.10.2025

1,3,**4,எதிரிகள் ஆஜர் . 2ம் ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 5ம் எதிரி இறந்து விட்டார்.இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது சென்னை மடிப்பாக்கத்தில் குடியிருந்து வருகிறேன். VN cars நான்கு சக்கர வாகனம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக இராமநாதபுரம் NIBCID police என்னை கடந்த 28.12.2017ம் தேதி TN01AE2693 skoda நான்கு சக்கர வாகனத்தை விற்பனை செய்தது தொடர்பாக என்னை விசாரணை செய்தார்கள். நான் மேற்படி வாகனத்தை ஒச்சையப்பாதேவர் மகன் சக்திவேல் என்பவருக்கு மேற்படி வாகனத்தை விற்பனை செய்தேன் என்று தெரிவித்தேன். மேற்படி வாகனத்தை ரூ2,75,000/- க்கு என்னுடைய கமிசன் ரூ5,000 சேர்த்து ரூ2,80,000க்கு சக்திவேல் என்பவரிடம் விற்பனை செய்தேன். மேற்படி வாகனத்தின் அசல் சான்றிதழ்களை சக்திவேல் பெற்றுக்கொண்டார் அதற்கான Delivery note சக்திவேலிடம் கொடுத்துளளேன். என்னிடம் இந்நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் Delivery note உடைய carban நகல் ஆகும். நான் சக்திவேலிடம் எழுதிகொடுத்த Delivery note அசலை அவர் பெற்றுக்கொண்டு விட்டார் . மேற்படி இந்த Delivery note ல் நான் பூர்த்தி செய்தேன், அதில் உள்ள கையொப்பம் சக்திவேல் உடையது. அந்த Delivery note carban நகல் **அ.த.சா.ஆ 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வாகனத்தை 2016ம் வருடம் விற்பனை செய்தேன். மேற்படி police என்னை விசாரிக்கும் போது skoda வாகனத்தில்

போலி சான்றிதழ்களை காண்பித்தார்கள் அந்த புகை சான்றிதழ்கள் நான் விற்பனை செய்த பிறகு சக்திவேல் அதை பெற்றதாக தெரிவித்தேன். இது சம்மந்தமாக இராமநாதபுரம் மாவட்ட NIBCID DSP என்னை விசாரணை செய்தார்.

**<u>1முதல் 3 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை:</u>**

Delivery note ல் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான் ஆனால் அதனை நான்தான் எழுதி பூர்த்தி செய்தேன்.Delivery note ல் என்னுடைய பெயர் உள்ளதா என்றால் இல்லை ஆனால் எனது தொலைபேசி எண்னை குறிப்பிட்டுள்ளேன் . Delivery note ல் உள்ள தொலைபேசி எண் எனக்கு உரியது என்பதற்கு ஆதாரம் தற்போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.Delivery note ல் அ.த.சா.ஆ 14 ல் Sellers என்ற காலத்தில் ஒன்றும் பூர்த்தி செய்யவில்லை என்றால் சரிதான். Skoda எனக்கு சொந்தமான வாகனம் இல்லை என்றால் சரிதான்,யாருக்கு சொந்தமானது என்பதற்கு அ.த.சா.ஆ 14 ல் குறிப்பு இல்லை என்றால் சரிதான். பெயர் மாற்றம் செய்வதற்கு விற்பனை செய்வதற்கு அசல் உரிமையாளருக்கு தான் உரிமை உண்டு என்றால் சரிதான்.அ.த.சா.ஆ 14 ல் உள்ள கையொப்பம் சக்திவேல் கையொப்பம் இல்லை என்றும் அது police கேட்டுக்கொண்டதற்கு இணங்க அ.த.சா.ஆ 14 பின்னர் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னை police விசாரணை செய்த போது மேற்படி SKODA வாகனம் யாருக்கு சொந்தமான என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். police வேண்டுகொளுக்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4வது எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை:</u>**

இல்லை என தெரிவிக்கப்பட்டது .

**<u>மறு விசாரணை:-</u>**

இல்லை.

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.